සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාතර්මේන්තුව A
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

| | | |
|---|---|---|
| **දෙවන** වාර පරීක්ෂණය | 2017 | 07 **ශ්‍රේණිය** |
| **இரண்டாம் தவணைப் பரீட்சை** | 2017 | தரம் 07 |
| **Second Term Test** | **2017** | **Grade 07** |

| | | |
|---|---|---|
| භූගෝල විද්‍යාව | I, II | **පැය දෙකයි** |
| புவியியல் | I, II | இரண்டு மணித்தியாலயம் |
| Geography | I, II | 2 Hours |

**பரீட்சை சுட்டெண் : ..................................................................**

**பகுதி 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. தனிநாடாக விளங்கும் கண்டம் எது?

   1) ஆபிரிக்கா 2) ஐரோப்பா 3) அவுஸ்திரேலியா 4) ஆசியா

2. பின்வருவனவற்றில் சுதந்திர வர்த்தக வலயமாக விளங்குவது எது?

   1) ஹக்கல 2) கொக்கல 3) ஹிக்கடுவ 4) கொழும்பு

3. யாழ்ப்பாண தீபகற்பத்தையும் அதைச் சுழவுள்ள தீபகற்பத்தையும் உள்ளடக்கும் நிலத்தோற்றத்தில் அமைந்துள்ள சுற்றுலா மையமாக விளங்குவது,

   1) சுண்டிக்குளம் 2) சிதுல்பவ்வ 3) யால 4) குமண

4. தென்னாசிய நாடுகளில் சேராத நாடு?

   1) நேபாளம் 2) பாகிஸ்தான் 3) பூட்டான் 4) மடகஸ்கார்

5. இலங்கையில் நீர்வள நாகரிகம் தோற்றம் பெற்ற தரைத்தோற்றம் எது?

   1) உலர்வலய நிலத்தோற்றம் 2) மலைநாட்டு நிலத்தோற்றம்

   3) ஈரவலய நிலத்தோற்றம் 4) கரையோர நிலத்தோற்றம்

**வினா 6- 15 வரையிலான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக.**

6. புவி தனது அச்சில் இருந்து ................................. சரிந்து அமைந்துள்ளது.

7. இலங்கையின் தென்மேற்கு , வடமேற்கு திசைகளில் இருந்து நாட்டினுள் பிரவேசிக்கும் காற்று ................................. எனப்படும்.

8. சீகிரியா , தம்புள்ள , ரிடிகல ……………………………. என்பன எச்சக்குன்றுகளுள் அடங்கும்.

9. ……………………………. சுந்திர வர்த்தக வலயமாகும்.

10. ……………………………. 300 மீற்றரை விட உயரமான பிரதேசமாகும்.

11. ……………………………. இயற்கையாக அமையப்பெற்றுள்ளவற்றுள் ஒன்றாகும்.

12. வட அகலாங்கு 66 $1/2^0$ கோடு ……………………………. எனப்படும்.

13. உலகின் பிரதான சமுத்திரங்களின் தென்பகுதியில் அமைந்துள்ள சமுத்திரம் ……………………………. கண்டத்திற்கு சமீபமாக அமைந்துள்ளது.

14. ……………………………. கரையோர நிலத்தோற்றத்தில் காணப்படும் ஒரு அம்சமாகும்.

15. ஊர்காவற்றுறை , நெடுந்தீவு , நயினாதீவு என்பன ……………………………. சிலவாகும்.

(பருவாக்காற்று , தீவு , ஆட்டிக் வட்டம் , அந்தாட்டிகா , $231/2^0$ , மத்தியமலைநாடு , பள்ளதாக்கு , கதிர்காமம் , அகன்ற சமவெளி , பியகம)

**வினா 16-20 வரையிலான கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

16. மகிந்தலை எச்சக்குன்றாகும். (……)

17. சமய நடவடிக்கைகள் தொட்டுணரக்கூடிய உரிமையாகும். (……)

18. சோமாவதி , மாதுறு ஓயா , வஸ்கமுவ என்பன உலர்வலயத்தில் காணப்படும் தேசிய பூங்காவாகும். (……)

19. இலங்கை பல்லின சமூகத்தை கொண்ட நாடாகும். (……)

20. அதிக வரட்சி , அதிக உஷ்ணம் , குறைந்த மழைவீழ்சிசகள் , அதிக வெப்பம் வெளியேற்றம் என்பன ஈரவலயத் தரைத்தோற்றத்தில் காணப்படுகின்ற பண்பாகும். (……)

(40 புள்ளிகள்)

## பகுதி 11

**முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

01) அ). தரப்பட்ட தேசப் படத்தில் பின்வரும் இடங்களை குறித்துக் காட்டுக.

( யால சரணாலயம் , கொழும்பு , கண்டி , ஹக்கல , திருகோணஸ்வரம் கோவில், தீகவாவி ) (12 புள்ளி)

02) அ). புவிச் சுழற்சி என்றால் என்ன? (2 புள்ளி)

ஆ). அதற்கு எடுக்கும் காலத்தையும் அதனால் ஏற்படும் விளைவுகள் 2 ஐக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ). புவி முழுமையான கோள வடிவத்திகை் கொண்டிருக்கவில்லை என்பதற்கான காரணத்தை குறிப்பிடுக. (5 புள்ளி)

03) அ). இலங்கையையும் இந்தியாவையம் பிரிக்கும் மிக ஒடுங்கிய ஆழமற்ற கடலின் பெயர் என்ன? (2 புள்ளி)

ஆ). இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவுகள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ). இலங்கை இஇந்தியாவுக்கு சமீபமாக அமைந்துள்ளதால் கிடைக்கும் நன்மைகள் 2 ஐக் குறிப்பிட்டு அதில் ஒன்று பற்றி சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

04) அ). இலங்கையின் வருடாந்த வெப்பநிலை எவ்வளவு ? (2 புள்ளி)

ஆ). இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கும் பிரதான வழிமுறைகள் இரண்டையும் அதன் காலப்பகுதியையும் குறிப்பிடுக. (3 புள்ளி)

இ). இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கும் மூன்று முறைகளிள் ஒன்று பற்றிசுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

05) அ). நிலத்தோற்றம் என்றால் என்ன? (2 புள்ளி)

ஆ). இலங்கையில் பிரதானமாகக் காணப்படும் நிலத்தோற்றங்கள் நான்கை குறிப்பிடுக. (3 புள்ளி)

இ). மேலே குறிப்பிடப்பட்ட நிலத்தோற்றங்களுள் ஒன்று பற்றி சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

06) அ). மலைநாட்டு நிலத்தோற்றத்தில் காணக்கூடிய , மலை , நீர் வீழ்ச்சி மேட்டுநிலம் ஒவ்வொன்று குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ). மலைநாட்டு நிலத்தோற்றத்தில் மனிதனால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் 4 ஐ எழுதுக. (3 புள்ளி)

இ). மலைநாட்டு நிலத்தோற்றத்தின் அழகை பாதுகாப்பதற்காக நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளி)


10 0 10 20 km